**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# Women's in *Purananooru* and *Thirukkural*

**Dr. S. R. Chithra,** Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-2358-0639**
**DOI: 10.5281/zenodo.14744718**

## Abstract

*Among the works of the Sangam era, "Purananooru" is the book in which most of the stories about Puram life (External life) are found. The women mentioned in this works are very heroic. They are more concerned about raising their children to be exemplary in bravery rather than just having them. They gave importance to chastity. Thiruvalluvar has pointed out the importance of women's chastity and progeny in his "Thirukkural". The women of ancient Tamil Nadu are special. In the Sangam period, Purananooru, and later Thirukkural, a book of ethics speak of the chastity of women living in their respective times and they raised their sons with bravery. This article examines these facets of life in a comparative perspective. By comparing the status of women who belong to two different periods, it is clear that they excelled in chastity, in bearing sons and raising them to be virtuous and valourous. The poets of that period also desired that women should live with such noble qualities. Although these two literatures are different from time, there are similarities in the way of life and literary concepts. Therefore, this article compares of these virtues withn ample evidences.*

**Keywords:** Woman, Chastity, Bravery, *Purananooru*, *Thirukkural*, Tamil Culture.

**References**
[1] Sarala Rajagopalan, *Purananurum Thirukkuralum – Opphaivu*. Oli Pathippagam. Dr. Ranga Salai, Chennai, December 2013.
[2] Sarathi, R.P., *Thirukkural Yeliya Urai*. Kizhakku Pathipagam, Royapettah, Chennai, 2011.
[3] Subramania Bharathiyar, C. *Bharathiyar Kavithaigal*. M. Vetriyarasi, Adhambakkam, Chennai, 2012.
[4] Pandian, K. *Purananutil Vazhviyal Kotpadugal*. Vanitha Pathipagam, T. Nagar, Chennai, December 2010.
[5] Bharathidasan. Kamatchi Publications, West Mambalam, Chennai, 2018.
[6] Manickavasagaan, N. *Purananuru Moolamum Uraiyum*, Uma Pathipagam, Chennai, September 1998.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# புறநானூற்றிலும் திருக்குறளிலும் பெண்கள்

**முனைவர் ச. ரா. சித்ரா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி,
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்திய.
**ORCiD: https://orcid.org/0009-0005-2358-0639**
**DOI: 10.5281/zenodo.14744718**

## ஆய்வுச்சுருக்கம்

*சங்ககால நூல்களில் ஒன்றான எட்டுத்தொகையில் புறம் பற்றிய செய்திகள் அதிகம் காணப்படும் நூல் புறநானூறு ஆகும். இப்புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் வீரம் மிகுந்தவர்கள். தங்கள் புதல்வர்களை ஈன்றதோடு நின்றுவிடாமல் அவர்களைச் சான்றோராக வளர்க்க வேண்டும் என்பதில் அதிக அக்கரையுடைவர்கள். கற்புநெறியிலும் தவறாமல் வாழ்ந்தவர்கள். திருவள்ளவரும் தன்னுடைய திருக்குறளில் பெண்களுடைய கற்புநெறி, மக்கட்பேறு போன்றவற்றைச் சுட்டியுள்ளார். எனவே இவ்விரு இலக்கியங்களும் காலத்தால் வேறுபட்டவை ஆயினும், இலக்கியக் கருத்துக்களில் ஒப்புமைகள் காணப்படுகின்றன. இவற்றை ஒப்பிட்டு இவ்வாய்வு தரப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** பெண், கற்பு, வீரம், *புறநானூறு*, *திருக்குறள்*, தமிழ்ப் பண்பாடு.

## முன்னுரை

பாரததேசப் பெண்கள் சிறப்பு வாய்ந்தவர்கள். சங்க கால இலக்கியம் புறநானூற்றிலும், சங்கம் மருவிய கால நீதி நூலான திருக்குறளிலும், அந்தந்தக் காலங்களில் வாழ்ந்த பெண்களின் கற்பு நெறி, புதல்வரைப் பெற்றதோடு அவர்களை வளர்க்கும் விதம், வீரம் போன்றவை விளக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒப்பிட்டு நோக்கில் ஆராய்ந்த கட்டுரையைக் கீழேக் காணலாம்.

## கற்பு நெறி

தமிழ்ப் பெண்கள் தங்கள் கற்பை உயிரினும் மேலாக எண்ணி வாழ்ந்தனர். தொல்காப்பியரும்,

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று (தொல்.கள.111)**

என்று கற்பிற்கு இலக்கணம் கண்டார். கற்பு என்பது திருமணத்திற்குப் பின்னர் ஆணும் பெண்ணும் உறவு பூண்டு வாழும் வாழ்க்கையாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கற்பைப் பேணும் பெண்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். கபிலர் திருமுடிக்காரியைப் பாடும் பாடலில்,

**வடமீன் புரையும் கற்பின் மடமொழி**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**அரிவை தோள் அளவு அல்லதை**

**நினதுஎன இலைநீ பெருமிதத் தையே (புறம்.122: 8-10)**

எனப்பாடுகிறார். அதாவது, **வடதிசையில் தோன்றும் அருந்ததி போன்ற கற்பும், இன்மொழியும், மென்தோளும் உடைய நின் துணைவியைத் தவிர, வேறெதையும் உனக்கெனக் கொள்ளாது, பிறர்க் களிப்பதே குறிக்கோளாகக் கொண்ட பெருமைக்குரியவனே என்னே நின் பெருமிதம் (மாணிக்கவாசகன், ஞா. ப. 170)** என்று புகழ்கிறார். இதில் திருமுடிக்காரியின் மனைவி அருந்ததி நட்சத்திரத்தைப் போன்ற கற்புடையவள் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது புலனாகும்.

ஒரு பெண்ணின் கற்பால், அது அவளுடைய கணவனுக்குப் பெருமை சேர்க்கும் என்பதைத் தமிழர்கள் நம்பினர். அதனால் தான் புலவர் இரும்பிடர்த்தலையார், பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியைப் பாடும் போது, **செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ (புறம்.3: 6)** என்று **குறைவற்ற கற்புடைய, தூமணி புனைந்த கோப்பெருந்தேவியின் கணவனே (மாணிக்கவாசகன், ஞா. ப.5)** என்று சிறப்பிக்கிறார். வடம வண்ணக்கன் பேரி சாத்தனார், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைச் சிறப்பித்துப் பாடும்போது, 'தணியாத ஆசையுடன் கற்புடைய ஆபரணம் அணிந்த உன் அன்பு மனையாளுடன் வாழ்க' என்கிறார். இதனை, **கடவுள் சான்ற கற்பின் சேயிழை (புறம். 198: 3)** என்னும் வரியால் அறியலாம்.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் பரிசில் தராது காலம் நீட்டித்த போது, மனம் வருந்திய ஆவுர் மூலங்கிழார், தான் "வறுமைக்குப் புகலிடமாக உள்ள என் வீட்டில், நாணுமும் கற்புமே, நல்ல அணியாகக் கொண்டு வாழும், வாள் போலும் நெற்றியுடைய என் அன்பு மனையாளை நினைத்து நான் போகிறேன். நீ நன்றாக நீண்ட நாள் வாழ்க" (மூலங்கிழார்) என்று தன் மனைவியின் கற்பின் திறத்தைப் பெருமையுடன் பேசுகிறார்.

இல்லறம் சிறப்புற இருக்க வேண்டுமானால், அங்குள்ள மனைவியும் மாட்சியுடன் இருக்க வேண்டும். அதனால் தான் திருவள்ளவரும் 'பெண்ணின் பெருந்தக்க யாவுள?' என்று வினாவினையெழுப்பி, அதற்கு அவரே 'கற்பே அப்பெண்மையின் சிறப்பாகும்', என்று பதிலுரையும் அளிக்கிறார். இதனை,

**பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்**

**திண்மைஉண் டாகப் பெறின் (குறள். 54)**

என்னும் குறள் மூலம் அறியலாம். அதுமட்டுமன்றி கற்புடைய பெண்ணானவள் 'பெய்' என்று கூறினால் உடனேயே மழை கூட பொழியும். இதனையே வள்ளுவர்,

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை (குறள்.55)**

என்கிறார். இத்தகு சிறப்பு வாய்ந்த கற்பைப் பெண்களால் மட்டுமே காக்க முடியும் என்பதனை,

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை (குறள். 57)**

என்னும் குறளால் அறியலாம்.

**புதல்வரைப் பெறுதல்**

ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் போது, தாயானவள் மகிழ்ச்சி அடைகிறாள். ஆனால் அக்குழந்தையை வளர்ப்பதிலும் அவள் முழு முனைப்புடன் இருந்தால்தான் இச்சமூகத்திற்கு சிறந்த ஒரு மனிதரைக் கொடுத்த மகிழ்ச்சி அவளுக்கு முழுமையாகக் கிடைக்கும். பொன்முடியார் என்னும் சங்ககாலப் பெண்புலவர் ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து ஆளாக்குவது தாயினுடைய கடமையாகும் என்கிறார். இதனை, **ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே (புறம். 312: 1)** என்னும் வரிகளால் அறியலாம். அறிவுடைய நல்ல மக்களைப் பெறுவதே, இல்வாழ்க்கையின் மிகப்பெரிய செல்வமாகும் என்பதை,

**பெறுமவற்றுள் யாமறிவ(து) இல்லை; அறிவறிந்த**
**மக்கட்பே(று) அல்ல பிற (குறள்.61)**

வள்ளுவரும் மக்கட்பேறு அதிகாரத்தில் முதல் குறளாகக் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகள் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் ரசிக்கும் படியாக இருக்கும். அவர்களுடைய மழலைச் சொல்லுக்கு மயங்காதவர்களே இல்லை. அவர்கள் உணவு உண்ணுவது கூட ஓர் அழகு ஆகும். இதனைக் கண்டு மயங்கிய சங்கப்புலவர்களும் தம் இலக்கியங்களில் இதனை அழகுற வெளிப்படுத்தியுள்ளனர். பல செல்வங்களைப் பெற்றிருந்தாலும், பலருடன் கூடி இருந்து உண்ணுகின்ற சுற்றம், நட்பு ஆகிய பல செல்வங்கள் இருந்தாலும், பெற்றவர்களுக்கு அன்பால் மயங்கச் செய்யும் பிள்ளைகள் இல்லையென்றால், அவர்களுடைய பிறவிப் பயனே வீண் என்பதனை,

**படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப் பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே (புறம். 188)**

என்று பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடல் உணர்த்துகிறது.

ஔவையாருக்கு அதியமான் நெல்லிக்கனி வழங்கியமையைப் பாராட்டி, அப்பெண்பாற் புலவர் வழங்கிய புகழ்மொழியானது, பெற்றோருக்குக் குழந்தைகள் பேசும் மழலைச் சொல் இன்பம் தருவதை ஒத்திருந்தது என்பதனை,

**யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**பொருளறி வாரா ஆயினும் தந்தையர்க்கு**

**அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை**

**என்வாய்ச் சொல்லும் அன்ன ஒன்னார்**

**கடிமதில் அரண்பல கடந்த**

**நெடுமான் அஞ்சிநீ அருளல் மாறே (புறம். 92)**

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

தம்முடைய குழந்தைகள் சிறு கைகளால் துழாவிய கூழே ஆனாலும், அக்கூழ் பெற்றோருக்கு அமிழ்தைவிடச் சிறந்தது என்பதை வள்ளுவர்,

**அமிழ்தினும் ஆற்ற இனிதே; தம் மக்கள்**

**சிறுகை அளாவிய கூழ் (குறள். 64)**

என்று குறிப்பிடுகிறார். பெற்றோருக்கு குழல் இசையும் யாழிசையும் விட தம் குழந்தைகளின் மழலைச் சொல் இனியது. மழலைச் சொல்லை கேளாதவர்களுக்குத் தான் குழலும், யாழும் இனிமை தரும். இதனை,

**குழலினி(து) யாழினி(து) என்பதம் மக்கள்**

**மழலைச்சொல் கோளா தவர் (குறள்.66)**

என்னும் குறளால் அறியலாம்.

**ஈன்றதைவிட பெரிதுவத்தல்**

ஒரு தாய், தன் மகனைப் பெற்றபோது அடையும் இன்பத்தைவிட, அவன் அறிஞன், பண்பாளன் என்று பிறரால் புகழப்படும் போது அதிக மகிழ்ச்சி அடைகிறாள் என்பதனை,

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள். 69)**

என்னும் குறள் உணர்த்தும். புறநானூற்றிலும் 'என் மகன் எனக்கு உற்ற துணையாகும், என்று ஓயாமல் பேசிப் புகழும் தாயை,

**… என் மகன்**

**வளனும் செம்மலும் எமக்கு என நாளும்**

**ஆனாது புகழும் அன்னை (புறம். 254: 8-10)**

என்று இவ்வரிகளால் அறியலாம்.

**வீரம்**

**நாவினில் வேத முடையவள் கையில்**

**நலந்திகழ் வாளுடை யாள் - தனை**

**மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை**

**வீட்டிடு தோளுடையாள் (பாரதியார் கவிதைகள், ப. 26)**

என்று பாரதி பாடிய தாய் போன்றே சங்க காலப் பெண்களும் கல்வியும், வீரமும், இரக்கமும், தைரியமும் உடைய பெண்களாகத் திகழ்ந்தனர். புறநானூற்றில் வீரமிகுந்த பெண்களைப் பல பாடல்களில் காணமுடியும். "வீரம் பொருந்திய இம்மகளிரைத் தனிக்குடியினராக - உரையாசிரியர்கள் குறித்துள்ளனர். இவர்கள் 'மூதின் மகளிர்' எனக் குறிக்கப்பட்டனர். இம்மகளிரின் வீரத்தைக் காட்டும் நிலையில் 'உவகைக் கலுழ்ச்சி' என்னும் துறை அமைந்துள்ளது. தனக்கு உறவுடையவர்கள் இறந்த போது அழாமல் இருத்தலே வியப்புக்குரியது. இம் முதுமகளிரோ ஒரே மகன், போரில் வீரமரணம் எய்தியமைக்காக மகிழ்வதாகக் காட்டப்படுகிறது. அவர்களுக்கு கண்களிலிருந்து இழியும் கண்ணீர், துன்பக் கண்ணீராக இல்லாமல் ஆனந்தக் கண்ணீராகக் காட்டப்படுகிறது. அதனால் இது 'உவகைக் கலுழ்ச்சி' என அழைக்கப்படுகிறது. (சரளா இராசகோபாலன். ப. 36)

காவற்பெண்டு பாடிய பாடலில் ஒரு தாயிடம் 'உன் மகன் எங்கே?" என்ற வினாவுக்கு, அவள் 'என் மகன் எங்கு சென்றிருக்கிறான்?' என்பதை நான் அறியேன். ஆனால் 'புலியிருந்த குகை அவனைப் பெற்ற என் வயிறு' என்று அவளுடைய வீரத்தையும், அவள் மகனின் வீரத்தையும் அவள் செப்புகிறாள். இதனை,

**சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்**
**யாண்டு உளனோஎன வினவுதி? என் மகன்**
**யாண்டுஉள னாயினும் அறியேன் ஓரும்**
**புலி சேர்ந்து போகிய கல்லளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறம். 86)**

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

வீரக்குடியில் பிறந்த ஒரு பெண், தன் மகள் போர்க்களத்தில் யானை வீழ்த்தி மாய்ந்தான் என்னும் செய்தி கேட்டு, அவனைப் பெற்ற நாளைவிட அதிகமாக மகிழ்ந்தாள் என்பதனை,

**முதியோள் சிறுவன்**
**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர் (புறம்.277: 2-4)**

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

முன்னர் நடந்த போரில் தன் தந்தையையும், தன் கணவரையும் இழந்த வீரப்பெண், அடுத்தப் போரில், தன் ஒரே மகனை அழைத்து, அவனுக்கு வெள்ளைத் துணி உடுத்தி, அவனது பரட்டைத் தலைக்கு எண்ணெய் தடவிச் சீவி குடுமி முடித்து, அவனைப் போர்க்களம் நோக்கிப் போ என்று அனுப்பி வைத்தாள். இத்தகைய வீரமிகுந்த தாயை,

**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துஉடீஇப்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே (புறநானூறு - 279. செல்கென விடுமே)**

என்று இப்பாடலில் நாம் காணலாம். திருவள்ளுவரும், 'ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்' என்று, அத்தாய் அச்சிறுவனை வீரத்தோடும், நற்பண்புகளோடும் வளர்த்ததாலேயே அச்சிறப்புப் பெற்றாள் என்று தன் குறளின் மூலம் சுட்டுகிறார்.

**முடிவுரை**

இருவேறு காலத்திய இலக்கியங்களிலும் பெண்களுடைய நிலையை ஒப்பிடுகையில் அவர்கள் கற்புத்திறத்திலும், புதல்வர்களைப் பெற்று அவர்களைச் சான்றோராக்குவதிலும், வீரத்திலும் சிறப்புடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், அக்காலத்திய புலவர்களும், பெண்கள் இத்தகு சிறப்புகளோடு வாழ வேண்டும் என்பதையே விரும்பினார்கள் என்பதும் புலனாகின்றது.

**குறிப்புகள்**

[1] சரளா இராசகோபாலன். *புறநானூறும் திருக்குறளும் – ஒப்பாய்வு.* ஒளிப்பதிப்பகம். டாக்டர் ரங்கா சாலை, சென்னை, டிசம்பர் 2013.
[2] சாரதி, ஆர்.பி. *திருக்குறள் எளிய உரை.* கிழக்குப் பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, 2011.
[3] சுப்பிரமணிய பாரதியார், சி. *பாரதியார் கவிதைகள்.* எம் வெற்றியரசி, ஆதம்பாக்கம், சென்னை, 2012.
[4] பாண்டியன், க. *புறநானூற்றில் வாழ்வியல் கோட்பாடுகள்.* வனிதா பதிப்பகம், தி.நகர், சென்னை, டிசம்பர் 2010.
[5] *பாரதிதாசன்.* காமாட்சி பப்ளிகேசன்ஸ், மேற்கு மாம்பலம், சென்னை, 2018.
[6] மாணிக்கவாசகன், ஞா. *புறநானூறு மூலமும் உரையும்.* உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை, செப்டம்பர் 1998.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.